**எதிர்காலத்தை குறித்த பயம்**

**வாசிக்க**: 1**கொரிந்தியர்** 15:42-53

உலகத்தில் பிறந்த ஒவ்வொருவரும் தன் எதிர்காலத்தை குறித்து சிந்திக்க வேண்டியதாயிருக்கிறது. நாம் உண்மையான அக்கறையுடன் சிந்தித்தால், நம்பிக்கையற்ற வருங்காலம் நம்முடைய சந்தோஷத்தை இழக்க செய்கிறது. விஞ்ஞானத்தின் உதவியால் பல சௌகரியங்கள் ஏற்பட்டிருந்தாலும், மனிதனுடைய உள்ளத்தில் ஏன் திருப்தி ஏற்படவில்லை? என்பது பெறும் கேள்விக்குறியாகவே இருக்கிறது. விஞ்ஞானம் வசதியுள்ள கட்டில்களையும், மெத்தைகளையும், தலையணைகளையும் தந்திருந்தாலும் நமக்கு தேவையான நிம்மதியான தூக்கத்தை தர யாராலும் முடியவில்லை! தன் எதிர்காலத்தைப் பற்றி சிந்திக்கும் தனி நபர்கள் "வாழ்க்கையின் முடிவை" நோக்கி தான் போகிறோம் என அறிவார்கள்.

ஒரு விஞ்ஞான கண்காட்சி சாலையில், "நீங்கள் உள்ளே வந்து உங்கள் எதிர்காலத்தை அறிந்து கொள்ளுங்கள்" என்ற பெயர் பலகையைப் பார்த்த அநேகர் வரிசையாக நின்று கொண்டு இருந்தனர். கதவு திறந்தவுடன், மக்கள் அவசர அவசரமாக உள்ளே சென்றுப் பார்த்த பொழுது, ஒர் மனிதனின் எலும்புக்கூடு தொங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்தனர். இது எவ்வளவு உண்மை! அது தான் தங்கள் எதிர்காலத்தின் முடிவு என்பதை அறிந்துக் கொண்டார்கள்.

நாம் பரிசுத்த தேவனின் நியாயத்தீர்ப்பை சந்திப்பதைப்பற்றி சிந்திக்கும்போது மகிழ்ச்சியாய் இருக்கிறோமா? வேதாகமத்தில்,"அன்றியும், ஒரே தரம் மரிப்பதும், பின்பு நியாயத்தீர்ப்படைவதும், மனுஷருக்கு நியமிக்கப்பட்டிருக்கிறது” (எபிரெயர் 9:27) என்று எழுதப்பட்டுள்ளது. ஒரு மிருகம் இறந்துவிடுமானால், "செத்து விட்டது" என்று சொல்லுகிறோம். ஆனால் ஒரு மனிதன் இறந்து விடும்போது, "ஐயோ! போய் விட்டாரே" என்று கூறுகிறோம். அவர் எங்கே போய் விட்டார்? அவருடைய உடல் இங்கு இருக்கும் பொழுது, உண்மையான மனிதன் எங்கு சென்று விட்டார்? நாம் கடைசி மூச்சுவிட்டவுடன், எங்கு செல்கிறோம் என எண்ணி பார்ப்பதற்கு நமக்கு விருப்பமில்லை. இருப்பினும் நமக்குள் எதிர்காலத்தைக் குறித்த பயம் இருந்துக் கொண்டு தான் இருக்கிறது.

மனிதனின் வாழ்க்கையில் மரணம் என்பது தவிர்க்க முடியாத ஒன்றாகும். மரணத்திற்குப் பின் மறந்து போகும் இயல்பைக் கொண்டவனாயிருப்பின்,

இக்கேள்விக்கே இடமில்லை. பரிசுத்த வேதாகமம், மனிதன் மரணத்தால் அழிந்து போகின்றவனாய் இராமல் நித்திய வாழ்வுடையவன் என்று கூறுகிறது. “மரித்தோரின் உயிர்தெழுதலும் அப்படியே இருக்கும். அழிவுள்ளதாய் விதைக்கப்படும். அழிவில்லாததாய் எழுந்திருக்கும்....... அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ள வேண்டும்” என்று வேதாகமத்தில் வாசிக்கிறோம்.

இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களுக்கு எதிர் காலத்தை குறித்து நம்பிக்கை இருக்கிறது. அது என்னவென்றால், நாம் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடைவோம் என்கிற நம்பிக்கைதான் அது. யோவான் 3:16

**கேள்விகள்**:

1. மனிதனுக்கு தேவையான நிம்மதியான தூக்கத்தை தர யாரால் முடியவில்லை?

2. இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர்களுக்கு இருக்கும் எதிர் காலத்தை குறித்து

நம்பிக்கை என்ன?

3. உங்கள் எதிர்காலம் என்ன?